RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in

DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 234 | ஆகஸ்டு 29, 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# காமராஜர் காலை உணவுத் திட்டம்: பெருந்தலைவர் பிறந்த ஊரிலிருந்து தொடங்கி வைக்கும் முதலமைச்சர் விஜய்!

சென்னை: ஆக.29-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் சமீபத்தில், 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டது. இத்திட்டத்தை, காமராஜரின் சொந்த ஊரான விருதுநகரில், செப்டம்பர் 17-ஆம் தேதி முதலமைச்சர் ஜோசப் விஜய் தொடங்கி வைக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2021-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க அரசு, ஓராண்டு நிறைவு பெற்றதை தொடர்ந்து, 07.05.2022 அன்று ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு சத்தான உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை அப்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்

அதனைத் தொடர்ந்து, 417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 மாணவர்கள், 163 நகராட்சி பள்ளிகளில் 17,427 மாணவர்கள், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகளில் 42,826 மாணவர்கள், 237 தொலைதூர, மலைபிரதேச பள்ளிகளில் 10,161 மாணவர்கள், என மொத்தம் 1,545 பள்ளிகளில், ஒரு லட்சத்து 14,095 மாணவர்கள் பயன்பெறக்கூடிய வகையில், 15.09.2022 அன்று மதுரை நெல்பேட்டை பகுதியில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார்.

அதன்பின்னர், 37,447 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலக்கூடிய 19 லட்சத்து 34,230 மாணவர்கள் பயன்பெறக்கூடிய வகையில், நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளுக்கும் திமுக ஆட்சியிலேயே இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.




பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்

தமிழ்நாட்டில் த.வெ.க ஆட்சி மாற்றத்திற்கு பின், கடந்த ஜூன் மாதம் 15 ஆம் தேதி சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜய் தலைமையில் நடைபெற்ற சமூக நலத்துறை ஆய்வுக் கூட்டத்திற்கு பின்னர் காலை உணவு திட்டம், செப்டம்பர் 17ஆம் தேதி முதல் எட்டாம் வகுப்பு வரை விரிவு படுத்தப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்கான பணிகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

மாநிலத்தில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் பெயரை, 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்' என பெயர் மாற்றம் செய்து கடந்த ஜூலை 22-ஆம் தேதி அரசாணை வெளியிட்டது தமிழ்நாடு அரசு.

மேலும், தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 15,454 பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் 15 லட்சத்து 14,274 மாணவ, மாணவிகள் பயனடையும் வகையில், இத்திட்டத்தினை விரிவாக்கம் செய்வதற்கான அனுமதியையும், இதற்கான தொடரும் செலவினத்திற்காக ரூபாய் 240.01 கோடியும், தொடரா செலவினத்திற்காக ரூபாய் 28.71 கோடியும் ஆக மொத்தம் ரூபாய் 268.72 கோடிக்கான நிதி ஒதுக்கீடு செய்தும் உத்தரவிடப்பட்டிருந்தது.

காமராஜர் படித்த பள்ளியில் விரிவாக்க நிகழ்ச்சி

இந்நிலையில் தந்தை பெரியாரின் பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் தேதி, விருதுநகரில் உள்ள முன்னாள் முதலமைச்சர் காமராஜர் படித்த கே.வி.எஸ் நடுநிலைப் பள்ளியில் வைத்து, 'பெருந்தலைவர் காமராஜர் உணவுத் திட்டம்' விரிவாக்கத்தை, முதலமைச்சர் நேரில் சென்று தொடங்கி வைக்க உள்ளார் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

முதலமைச்சராக பொறுப்பேற்ற பின் முதன்முறையாக தென் மாவட்டத்திற்கு; அதுவும் காமராஜர் பெயரில் தொடங்கப்படும் திட்டத்தை தொடங்கி வைக்க அவரின் சொந்த ஊருக்கே முதலமைச்சர் ஜோசப் விஜய் செல்வது குறிப்பிடத்தக்கது. இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என அரசு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

# திமுக மாவட்டங்கள் 77-ல் இருந்து 110 ஆக உயர்வு

சென்னை: ஆக.29-

திமுக அமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், தற்போதுள்ள 77 மாவட்டக் கழகங்களின் எண்ணிக்கையை 110-ஆக அதிகரித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுக என்ற பேரியக்கம், கொள்கை, அமைப்புமுறை, செயல்பாடுகள, உடன்பிறப்புகள் என்ற நான்கு அடிப்படைகளைக் கொண்டு இயங்கும் இயக்கம்.

இந்நான்கையும் காலங்கள் தோறும் நாம் புதுப்பித்தும், மேன்மைப்படுத்தியும், கூர்தீட்டியும், செழுமைப்படுத்தியும் வந்திருக்கிறோம். இவை அனைத்தும் கோடிக்கணக்கான உடன்பிறப்புகளின் எண்ணங்கள் அடிப்படையில்தான் அமைந்துள்ளன.

அந்த அடிப்படையில், கடந்த 22.8.2026 அன்று நடைபெற்ற கழக தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிர்வாகச் சீரமைப்புக்குத் தேவையான மிக முக்கியமான முடிவுகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றி இருக்கிறோம்.

திமுக தொடங்கப்பட்ட நாள் முதல், இதுவரையில் 15 முறை கழக அமைப்புரீதியாகத் தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துள்ளோம். இதன் தொடர்ச்சியாக 16-ஆவது கழக அமைப்புத் தேர்தலை நடத்திடவும், பல்வேறு அமைப்புரீதியாக நிர்வாக மாற்றங்கள் மேற்கொள்ளப்படவும் பல தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதில் மிக முக்கியமானது மாவட்டக் கழகங்கள் குறித்த தீர்மானமாகும். அதில், தற்போதுள்ள மாவட்டக் கழகங்களின் எண்ணிக்கையை 77-இலிருந்து 110-ஆக அதிகரித்து, எந்தெந்தத் தொகுதிகள் எந்தெந்த மாவட்டங்களில் இடம்பெற வேண்டும் என்பதை வரையறுப்பதற்கான அதிகாரம் கழகத் தலைவரான எனக்கு வழங்கப்பட்டது.

இதனையடுத்து, கழக மறுசீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், கழக முன்னணியினருடன் கலந்தாலோசித்து, தமிழகத்தில் உள்ள தொகுதிகளை 110 மாவட்டங்களாகப் பகுத்து அறிவிக்கிறேன். அதில், அதிகமான மக்கள் தொகை இருப்பதன் காரணமாகச் சோழிங்கநல்லூர் தொகுதி மட்டும் தனி மாவட்டமாக அறிவிக்கப்படுகிறது.

அறிவிக்கப்பட்டுள்ள இந்த 110 மாவட்டக் கழகங்களில் தற்போதுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகத்தால் அனுப்பப்படும் பிரதிநிதியின் முன்னிலையில் மாவட்டச் செயற்குழுவைக் கூட்டி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள கழக மாவட்டங்களின் அடிப்படையில், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளை அமைப்புகளைப் பிரிப்பதற்கான பரிந்துரைகளை 15 நாட்களுக்குள் வழங்கிட வேண்டும் என்றும், தலைமைச் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும், கழக மறுசீரமைப்புக்குழு மூலம் வழங்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, கழக அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 5.32 லட்சம் மிதிவண்டிகள் - டெண்டர் கோரிய தமிழக அரசு

சென்னை: ஆக.29-

11-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 5.32 லட்சம் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்திற்கான தமிழ்நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) கோரியுள்ளது.

தமிழ்நாட்டில் 2026-27ஆம் கல்வியாண்டில் 11-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்காக, தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநரகம் சார்பில், டெண்டர் கோரப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு மிதிவண்டி

இதுகுறித்து வெளியான அறிவிப்பில், "பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ள மிதிவண்டிகள் தலைக்கவசம் மற்றும் தண்ணீர் பாட்டிலுடன் கொள்முதல் செய்யப்பட உள்ளன. இதற்காக இந்தியாவில் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களிடமிருந்து நிர்ணய விலை ஒப்பந்தம் (Fixed Rate Contract) அடிப்படையில் மிதிவண்டிகளை கொள்முதல் செய்ய பள்ளிக் கல்வித்துறை திட்டமிட்டுள்ளது.




அதன்படி, 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 2,37,133 மிதிவண்டிகளும், மாணவியர்களுக்கு 2,95,255 மிதிவண்டிகளும் என மொத்தம் 5,32,388 மிதிவண்டிகள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. இந்த மிதிவண்டிகள், தலைக்கவசம் மற்றும் தண்ணீர் பாட்டிலுடன் இணைந்து வழங்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

150 நாட்கள் அவகாசம்

மேலும், கொள்முதல் ஆணை பெற்ற நாளில் இருந்து 150 நாட்களுக்குள் மிதிவண்டிகளை வழங்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. டெண்டரில் பங்கேற்க விரும்பும் நிறுவனங்கள் ரூ.70 லட்சம் முன்பிணைப்பு தொகையை செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டெண்டர் தொடர்பான பதிவு மற்றும் கூடுதல் விவரங்களை https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். டெண்டர் ஆவணங்களை இணையவழியாக சமர்ப்பிக்க ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 28 மாலை 3 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மாணவர் மற்றும் மாணவியருக்கான தலா ஒரு மாதிரி மிதிவண்டியை சமர்ப்பிக்க வேண்டிய செப்டம்பர் 28 ஆம் தேதி மாலை 5 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 8-ஆம் தேதி ஏலக்கூட்டம்

ஏலக்கூட்டம் செப்டம்பர் 8 ஆம் தேதி காலை 11 மணிக்கு சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநரகம் அலுவலகத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி செப்டம்பர் 29 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு இணையவழியாக திறக்கப்படும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

இந்தாண்டுக்கான தமிழ்நாடு பட்ஜெட்டில் மேம்படுத்தப்பட்ட மிதிவண்டிக்கான அறிவிப்பு வெளியான நிலையில், தற்பொது டெண்டர் கோரப்பட்டுள்ளது.

# அரசுப் பள்ளிகளை சீரமைக்காமல் போட்டி தேர்வுகளுக்கு இலவச ஆன்லைன் பயிற்சியா.!! பிரதமருக்கு ஜெய்ராம் ரமேஷ் கேள்வி...

டெல்லி: ஆக.29-

போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இலவச இணையவழிப் பயிற்சி வழங்கப்படும் என்ற பிரதமர் மோடியின் அறிவிப்பை காங்கிரஸ் கடுமையாக விமர்சித்து உள்ளது. இது பொறுப்பு ஏற்பதில் இருந்து தப்பிப்பதற்கான ஒன்றிய அரசின் ஒரு தந்திரம் என்று சாடி உள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான ஜெய்ராம் ரமேஷ், இத்தகைய திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் திறன் அரசிடம் இல்லை என்றும் குற்றம் சாட்டி உள்ளார். எனவே இந்த அறிவிப்பு கல்வித்துறையின் உண்மையான பிரச்சினைகளை தீர்க்காமல் திசைதிருப்பும் ஒரு "ஏமாற்று வேலை" என்று அவர் கூறியுள்ளார்.

கோட்டாவில் நடந்த ஒரு கூட்டத்தில், இந்தியக் குடும்பங்கள் பொதுக் கல்வியை விட 2.5 மடங்கு அதிகப் பணத்தைத் தனியார் பயிற்சி மையங்களுக்குச் செலவிடுகிறார்கள் என்று எங்கள் தலைவர் ராகுல் காந்தி சுட்டிக்காட்டியிருந்தார். இதற்கு ஆதரவாக பொதுமக்களிடம் எழுந்த கருத்துக்களுக்கு பயந்தே பிரதமர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என்றும் ஜெய்ராம் ரமேஷ் கூறி உள்ளார். அதே போல பள்ளிகளையும், பல்கலைக்கழகங்களையும் தரம் உயர்த்துவதற்குப் பதிலாக, ஆன்லைன் பயிற்சி உள்கட்டமைப்பிற்குப் பொதுப் பணத்தை பயன்படுத்த முனைவது தவறானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# முதலமைச்சர் வருகைக்காக தயாராகும் மேட்டூர் அணை வர்ணம் பூசுதல், மேடை அமைக்கும் பணிகள் தீவிரம்

சேலம்: ஆக.29-

டெல்டா பாசனத் தேவைக்காக வரும் செப்டம்பர் 1-ம் தேதி மேட்டூர் அணையை முதலமைச்சர் விஜய் திறந்து வைக்கவுள்ள நிலையில், நிகழ்ச்சிக்கான பணிகள் விறுவிறுவென நடைபெற்று வருகிறது.

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறக்கப்படும். இந்த ஆண்டு போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தினால், டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடவில்லை. அதேபோன்று, ஆகஸ்ட் 1-ஆம் தேதி கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு திறக்க வேண்டிய தண்ணீரும் திறக்கப்படவில்லை.

உரிய நேரத்தில் தண்ணீர் கிடைக்காததால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். பல்வேறு பகுதிகளில் பயிர்கள் நீரின்றி கருகும் நிலை உருவானது. இதற்கிடையே, நெல் சாகுபடிக்கும் உதவும் வகையில், ரூ. 134 கோடி மதிப்பில் குறுவை சிறப்பு தொகுப்பை முதலமைச்சர் விஜய் அறிவித்தார்.



இந்த நிலையில், கபினி அணை மற்றும் கே.ஆர்.எஸ் அணைகளில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் ஆனது ஒகேனக்கல் மற்றும் மேட்டூர் அணைக்கு வரத் தொடங்கியது. இதன் காரணமாக நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. விரைவில் 90 அடியை அணை எட்டவுள்ளது.

அதன் அடிப்படையில், வருகின்ற செப்டம்பர் 1-ம் தேதி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையை முதலமைச்சர் விஜய் திறந்து வைப்பார் என தமிழ்நாடு அரசு அறிவித்தது. இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், "செப்டம்பர் 1 முதல் 45 நாட்களுக்கு, அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தைப் பொறுத்து நீர் திறந்துவிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் விஜய், மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக நீரைத் திறந்து வைக்க உள்ளார்.

2026-2027 பாசன ஆண்டின் தொடக்கத்தில் மேட்டூர் அணையில் பயன்பாட்டிற்குரிய நீர் இருப்பு 41.223 டி.எம்.சி. மட்டுமே இருந்தது. கர்நாடக அணைகளிலிருந்து கிடைக்க வேண்டிய நீர் போதிய அளவில் கிடைக்காததாலும், அணையின் குறைந்தபட்ச இருப்பான 10 டி.எம்.சி.யை பராமரிக்க வேண்டியிருந்ததாலும், டெல்டா பாசனத்திற்குத் தொடர்ச்சியாக நீர் வழங்க இயலாத சூழ்நிலை எற்பட்டது" எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மேட்டூர் அணையில் காவல்துறையினர், நீர்வளத் துறை அதிகாரிகள், போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் ஆகியோர் ஆய்வு நடத்தினர். தற்பொழுது, நீர் திறப்பு விழாவிற்காக நீர்வளத் துறை சார்பில் மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், அணையை சுற்றியுள்ள முட்பதர்கள் அகற்றப்பட்டு, நுழைவாயில் மற்றும் சுற்றுள்ள சுவர்களின் வர்ணம் பூசும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. மேலும், அணைப்பகுதியில் அதிகளவில் குரங்குகள் இருப்பதால், அதனை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறை சார்பில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

# சோலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

நீலகிரி, ஆக.29–

நீலகிரி மாவட்டம் உதகை வட்டம், சோலூர் பேரூரா ட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் உதகை வட்டம் சோலூர் பேரூராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், மருந்துகளின் இருப்பு மற்றும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், அதே பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் சோலூர் கால்நடை மருந்தகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், மருந்துகளின் இருப்பு, கால்நடைகளின் வருகை குறித்தும், சோலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, பள்ளியின் சமையலறை, இருப்பு அறை மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவினையும், சோலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகள், வங்கியின் செயல்பாடுகள், பயிர்கடன் குறித்தும், மேலும், சோலூர் கிளை நூலகத்தில் பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் வாசகர்களின் எண்ணிக்கை குறித்தும், நியாய விலைக்கடையில் உணவு பொருட்களின் இருப்பு, தரம், பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்தும் மற்றும் சோலூர் பேரூராட்சி அலுவலகத்தில், பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், பொதுமக்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் , சோலூர் பேரூராட்சிக்குட்பட்ட கோட்டட்டி மற்றும் சேலக்கல் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகள், குழந்தைகளின் வருகை, குழந்தைகளின் எடை, உயரம் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், ரூ.24.60 இலட்சம் மதிப்பில் கோக்கால் பகுதியில் கட்டப்பட்டு வரும் பழங்குடியினருக்கான மண்பாண்ட பட்டறையினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், சோலூர் பேரூராட்சி செயல் அலுவலர் பிரகாஷ், இளநிலை பொறியாளர் கணேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மதுரை மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று, 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் இளநிலை மருத்துவப் படிப்பில் சேர்ந்த 8 மாணவியர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணாவை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.




# தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பெண் பிரதிநிதிகளுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம்

திருப்பத்தூர், ஆக.29–

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஊராட்சி ஒன்றியம் இலக்கிநாயக்கன்பட்டி ஊராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பெண் பிரதிநிதிகளுக்கான ஒரு நாள் பயிற்சி வகுப்பு பீட்ஸ் தொண்டு நிறுவனத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. பீட்ஸ் நிறுவனத்தின் செயலாளர் ராதாசங்கர் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற பெண் தலைவர்கள் லட்சுமி (இலக்கிநாயக்கன்பட்டி), மஞ்சுளா (மட்றப்பள்ளி), பவுனம்மாள் (சின்னகசிநாயக்க ன்பட்டி), மரகதம் (குனிச்சி), மகாராணி (பெரியகரம்), தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் மாவட்ட செயலாளர் ராதாகிருஷ்ணன் ராபின், பீட்ஸ் தொண்டு நிறுவனத்தின் ஒருங்கிணை ப்பாளர் திவ்யா உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். நாம் முன்னெடுப்போம் அமைப்பின் பயிற்சியாளர் ரோஸ்லின் ஜீவா, மணி வருகை தந்த ஊராட்சி மன்ற பெண் தலைவர்கள், ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள், வார்டு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கினர். உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் அவற்றிற்கான தீர்வுகளை மிக விரிவாக எடுத்துரைத்தினர். இந்த பயிற்சி முகாமில் ஏராளமான தலைவர் துணைத் தலைவர் வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பீட்ஸ் தொண்டு நிறுவனத்தின் சங்கர் அவர்கள் நன்றி கூறினார்.



# மாவட்ட சிலம்பப் போட்டியில் சீனி ஆசான் பள்ளி மாணவர்கள் சாதனை - 8 பேர் மாநிலப் போட்டிக்கு தகுதி

சிவகங்கை, ஆக.29–

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்பில் மாவட்ட அளவிலான சிலம்பப் போட்டி, ஆகஸ்ட் 21–ஆம் தேதி சிவகங்கை மன்னர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

சீனி ஆசான் சிலம்பம் பள்ளியின் தலைமைப் பயிற்சியாளர் செல்வம் தலைமையில் 15 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

இரட்டைக்கம்பு 17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ரித்தீஷ், புகழேஷ் ஆகியோர் முதல் பரிசு பெற்றனர். ஒற்றைக்கம்பு 14, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ராஜேஷ், மதன்குமார், ருத்ரன் ஆகியோர் முதல் பரிசு வென்றனர்.

பெண்களுக்கான ஒற்றைக்கம்பு 17 மற்றும் 19 வயதுப் பிரிவில் சுவாதி, விஷாலி ஆகியோர் முதல் பரிசு பெற்றனர். கம்புச் சண்டை பிரிவில் கரண்குமார் முதல் பரிசையும், ஆகாஷ், ரோஷினி, மோனிஷ்குமார் மற்றும் விசாகமித்ரா ஆகியோர் மூன்றாம் பரிசையும் வென்றனர்.

இதன் மூலம் சிவகங்கை மாவட்டத்தி ற்கும், சீனி ஆசான் சிலம்பம் பள்ளிக்கும் மாணவர்கள் பெருமை சேர்த்துள்ளனர். முதல் பரிசு வென்ற 8 மாணவ, மாணவிகள் மாநில அளவிலான சிலம்பப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

# மாநில அளவிலான இலவச முழுமாதிரி தேர்வுகள்

தேனி, ஆக.29–

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி 1 முதல்நிலை தேர்விற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத்தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்பு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் கடந்த 03.06.2026 முதல் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.இத்தேர்விற்கு விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரர்கள் பயன்பெறும் வகையில் சிறந்த வல்லுநர்கள் மூலம் வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு, மாநில அளவிலான இலவச முழுமாதிரி தேர்வுகள் 22.08.2026, 29.08.2026 மற்றும் 05.09.2026 ஆகிய தேதிகளில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் நடைபெற உள்ளது.




இத்தேர்வினை எழுத வருகை தரும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப நகல் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். இம்முழுமாதிரி தேர்வில் பங்குபெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்களின் பெயரை 63792 68661 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

# விநாயகர் சிலைகளை அழகுபடுத்த ரசாயன பொருட்களை பயன்படுத்தக் கூடாது ; கலெக்டர் அறிவுறுத்தல்

கிருஷ்ணகிரி, ஆக.29–

விநாயகர் சிலைகளை அழகுபடுத்த ரசாயன பொருட்களை பயன்படுத்த கூடாது என கலெக்டர் அறிவுறுத்தியுள்ளார்.



இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தொன்று தொட்டு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர் நிலைகள் நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும் போது, விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான மத்திய மாசு கட்டுப்பாடு வழிகாட்டுதல்களின்படி மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டு உள்ள இடங்களில் மட்டும் கரைத்து, சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

களி மண்ணால் செய்யப்பட்டதும் மற்றும் பிளாஸ்டர் ஆஃப்பாரிஸ், பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் கலவையற்றதுமான, சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படும்.

சிலைகளில் ஆபரணங்கள் தயாரி ப்பதற்கு உலர்ந்த மலர் கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்த ப்படலாம். மேலும், சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கு மரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம். ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் தொர்மாக்கோல் பொருட்களை பயன்ப டுத்த கூடாது. சிலைகளை அழகுபடுத்த வண்ணப்பூச்சுகள் மற்றும் பிற நச்சு ரசாயனங்கள் கொண்ட பொருட்களுக்கு பதிலாக, இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

மேலும், விநாயகர் சதுர்த்தி விழாவின் போது சுற்றுச்சூழலிற்கு உகந்த பூக்கள், இலைகள் மற்றும் துணிகளை பூஜை பொருட்களாக பயன்படுத்த வேண்டும். பிரசாத விநியோகத்திற்கு மக்கும் அல்லது மீண்டும் பயன்படுத்தக்கூடிய தட்டுகள் மற்றும் கண்ணாடி கோப்பைகளை பயன்படுத்தலாம். அறிவிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே சிலைகளை கரைக்க வேண்டும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

# சென்னை கிரீன் சிட்டி அரிமா சங்கம் சார்பில் மாபெரும் சித்த மருத்துவ முகாம்

## பெண்களுக்கான சிறப்பு மருத்துவ பரிசோதனை, மரக்கன்றுகள் வழங்குதல், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

பொழிச்சலூர், ஆக.29–

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பொழிச்சலூரில் ஸ்ரீஅன்னதான சாய்பாபா ஆலயத்தில் சென்னை கிரீன் சிட்டி அரிமா சங்கம் சார்பில் அரிமா மாவட்ட தலைவர் தொழிலதிபர் லயன் பி.ஆர்.எஸ்.சரவணராஜ் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் சித்த மருத்துவ முகாம், மற்றும் பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் சிறப்பு முகாம், சுற்றுச்சூழலை பாதுகாக்க வலியுறுத்தி மரக்கன்றுகள் வழங்குதல், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இதில் சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீஅன்னதான சாய்பாபா திருக்கோவில் அறங்காவலர் நடராஜன், 3241c அரிமா மாவட்ட ஆளுநர் லயன். ராஜேஷ்ஜோஷி, முன்னாள் அரிமா மாவட்ட ஆளுநர் லயன் போஸ், தேசிய சித்தா மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மருத்துவர் செந்தில்வேல், சென்னை கிரீன் சிட்டி அரிமா சங்க நிறுவனர் லயன் ஐ.நா. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் முதல் நிகழ்வாக ஸ்ரீஅன்னதான சாய்பாபா ஆலயத்தில் காலை சிறப்பு வழிபாடு நடைபெற்றது

இதில் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பிறந்தநாள் காணும் மரக்கன்றுகள் வழங்கும் திட்டத்தின் அரிமா மாவட்ட தலைவர் தொழிலதிபர் லயன் பி.ஆர்.எஸ். சரவணராஜ் ஆகியோர் கலந்துகொண்டு வழிபாடு செய்தனர்.

அதைத்தொடர்ந்து சித்த மருத்துவ முகாமினை தேசிய சித்தா மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் மருத்துவர் செந்தில்வேல் தொடங்கி வைத்தார்.

இதில் அரிமா மாவட்ட ஆளுநர் லயன் ராஜேஷ்ஜோஷி, மற்றும் முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் போஸ் ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவ முகாமில் வழங்கப்படும் பரிசோதனைகள் குறித்து முகாமில் கலந்துகொண்ட பொதுமக்களிடம் கேட்டறிந்தனர்.

சித்த மருத்துவ முகாமில் உச்சி முதல் பாதம் வரை அனைத்து விதமான பிரச்சனை களுக்கும் மருத்துவர்கள் ஆலோசனையின் படி மருந்து மாத்திரைகள் இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு வடை, பாயாசத்துடன் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் அரிமா சங்க நிர்வாகிகள் பொதுமக்களுக்கு உணவுகளை பரிமாறினர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் சுற்றுச்சூழலை பாதுகாக்க வலியுறுத்தி சென்னை கிரீன் சிட்டி அரிமா சங்கம் சார்பில் மரக்கன்றுகள், பூச்செடிகள் ஆகியவை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் "நல்ல படம்" திரைப்படத்தின் இசை வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

சென்னை கிரீன் சிட்டி அரிமா சங்கத்தின் நிறுவனரும், திரைப்பட நடிகருமான லயன் ஐ.நா. கண்ணன் இசை குறுந்தகட்டினை வெளியிட்டார்.

இதில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் அரிமா சங்க நிர்வாகிகள் ஆகியோர் "நல்ல படம்" திரைப்படத்தின் கதாநாயகனுடன் இணை ந்து குழு படம் எடுத்துக் கொண்டனர்.

இதில் சென்னை கிரீன் சிட்டி அரிமா சங்க தலைவர் வழக்கறிஞர் லயன். நரேஷ்குமார், பொருளாளர் லயன்.அண்ணாமலை, அரிமா மண்டல தலைவர் லயன் லதாமகேஸ்வரி, அரிமா வட்டார தலைவர் லயன்.ஸ்ரீதர், அரிமா மாவட்ட தலைவர் இரவிசங்கரன், நிர்வாகிகள் லயன் மதியழகன், லயன் ஹரிகிருஷ்ணன் உட்பட ஏராளமான அரிமா சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




■ மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் தளபதி விஜய் பயிலகம் 500–வது நாள் துவக்க விழாவை முன்னிட்டு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் ரேவன் சரண் மாணவர்களை வாழ்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார் மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் மதுரவாயல் வடக்கு பகுதி துணைச் செயலாளர் துளசிராமன் ஏற்பாட்டில் இயங்கி வரும் தளபதி விஜய் பைலகம் 500–வது நாள் துவக்க விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கு ஸ்கூல் பேக் நோட்டு புத்தகம் உள்ளிட்ட உபகரணங்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் வடக்கு பகுதி செயலாளர் இளங்கோ மற்றும் 144 வது வட்ட செயலாளர் ராஜேஷ் கட்சியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# தமிழ்நாடு முதல்வருக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் முதல்வருக்கு மனமார்ந்த நன்றி!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலனை பாதுகாப்பதோடு மட்டும் அல்லாமல் அவர்களை தன்னம்பிக்கையுடன் மாற்ற வேண்டும் எனவும், மேலும் மாற்றுத்திறனாளிகள் வாழ்க்கையை கஷ்ட காலத்தில் இருந்து மீட்டு, அவர்களின் வாழ்க்கை முறையை உயர்நிலைக்கு கொண்டு செல்லும் வகையில், வாழ்வை இன்னும் எவ்வாறு எளிதாக்கலாம் என்பதை கருத்தில் கொண்டு மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக ரூ.1,485 (ரூபாய் ஆயிரத்து நானூற்று எண்பத்து ஐந்து கோடி) தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் முக்கிய அம்சங்களாக சேவைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சான்றிதழ்கள், நலத்திட்ட உதவிகள், உதவி உபகரணங்கள் மற்றும் ஆலோசனைகள் ஒரே மையத்தில் வழங்கப்படுகின்றன. மேலும், மறுவாழ்வு சேவை ஊர்திகள், மாற்றுத்திறனாளிகளுக்கான நடமாடும் மறுவாழ்வு சேவை வாகனங்களை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. கட்டணமில்லா சேவைகள்,இ–சேவை மையச் சேவைகள் மற்றும் இதர உதவி சேவைகளை மாற்றுத்திறனாளிகள் கட்டணமின்றி இத்திட்டத்தில் பெற்று பயன்பெறலாம். தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் 'விழுதுகள்' (Vizhuthugal) என்பது, மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான அனைத்து அரசுச் சேவைகளையும் உதவிகளையும் ஒரே இடத்தின் கீழ் கட்டணமின்றி வழங்கும் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் மற்றும் மறுவாழ்வு திட்டமாகும்.

அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்தின் மூலம் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் 2025–ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தமிழ்நாடுகள் உரிமைகள் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 250 முன்களப் பணியாளர்களைக் கொண்டு 16 வட்டாரங்களில் கணக்கெடுப்பு பணி, தேவை மதிப்பீடுகள் போன்ற பணிகள் இல்லங்கள்தோறும் நடைபெற்று வருகிறது. இதன்மூலம் மாற்றுத்திறனாளிகளைக் கண்டறிந்து அவர்களின் தேவையை பிரத்தியேக செயலியின் மூலம் தரவுகள் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துதுறையின் சார்பில் கீழ் இதுவரையில் 22,256 நபர்களிடம் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. மேலும் 21,320 நபர்களிடம் தேவை மதிப்பீடு பகுப்பாய்ந்து தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இல்லம் தோறும் மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பிலும், தேவைகள் மதிப்பீட்டிலும் தமிழக அளவில் 2 ஆம் இடத்தில், சிவகங்கை மாவட்டம் உள்ளது. இத்திட்டதின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய உதவிகள் இல்லம் தேடி சென்று வழங்கப்பட்டு வருகிறது. களப்பணியாளர்கள் மூலம் 11,014 மாற்றுத்திறனாளிகளுக்கு பிறத் துறைகள் மூலம் பெறும் சலுகைகள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்படுகிறது.



மேலும், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை மற்றும் தேவகோட்டை உட்கோட்ட அளவிளான ஒருங்கிணைந்த சேவை மையங்களாகவும், காளையார்கோவில், சாக்கோட்டை, காரைக்குடி, திருப்புவனம், மானாமதுரை (நகரம்), மானாமதுரை (கிராமம்), திருப்பத்தூர், கல்லல், கண்ணங்குடி, இளையான்குடி, தேவகோட்டை, எஸ் புதூர் ஆகிய 12 வட்டாரங்களில் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையங்க இயங்கி கொண்டுள்ளது. மேலும் 4 வட்டாரங்களில் செயல்பட ஆயத்தப்பணிகளில் உள்ளது.

மேற்கண்ட மறுவாழ்வு சேவை மையங்களில் நவீன உபகரங்களை கொண்டு மாற்றுதிறனாளிகளுக்கு சேவை வழங்கப்பட்டுவருகிறது. ஆலோசகர்கள் இயன்முறை சிகிச்சையாளர்கள் தொழில்வழி சிகிச்சையாளர்கள் சிறப்பாசியார்கள் ஆகியோர்களை பணியமார்த்தப்பட்டு ஆலோசனை இயன்முறை சிகிச்சை (பிசியோதெரபி) பார்வை குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுகள் அறிவுசார் குறைபாடுடையோர்கான சிறப்பாசிரியார்களைக் கொண்டு சேவை ஒரு நாளில் 30 நபர்கள் வீதம் மூலம் 17,434 நபர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், மாற்றுதிறனாளின் இல்லங்களுக்கே சென்று சேவை வழங்கப்படுகிறது. துணைப்பிரிவு மையங்கள் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை செயல்படுகிறது. வட்டடார அளவிலான மையங்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை வாரத்தில் 6 நாட்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறது.



சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருமதி பரமேஸ்வரி அவர்கள் தெரிவிக்கையில்,

நான் 50 வயதான நிலையில், 72% செவித்திறன் குறைபாடு இருப்பதால் எனது குடும்பம் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் தான் உள்ளது. தனிமை உணர்வையும் நிலையான வருமானத்தைப் பெறுவதில் சிரமங்களையும் எதிர்கொண்டு வந்தேன்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் எனது ஆர்வங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள திறன்கள் கண்டறியப்பட்டு, எனக்குத் தையல் கலையில் திறமையும் ஆர்வமும் இருப்பது எனக்கே தெரியவந்தது. தையல் திறனை வாழ்வாதாரத்திற்கான வழியாகப் பயன்படுத்தவும், பொருளாதார ரீதியாகச் சுயசார்பு கொண்டவராக மாறவும் எனக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வாழ்வாதார ஆதரவுத் திட்டத்தின் கீழ் ஆலோசனை வழங்கி, தையல் இயந்திரம் வழங்கப்பட்டது நான் சொந்தத் தையல் பணியைத் தொடங்கினேன். தற்போது தையல் தொழில் மூலம் வருமானம் ஈட்டி, எனது வாழ்வாதாரத்திற்கு பெரும் உதவியாக இருந்தது. மேலும், முறையான வழிகாட்டுதல்களும், வாய்ப்புகளும் வழங்கப்படும்போது, மாற்றுத்திறனாளிகளால் கூட வெற்றிகரமாகச் சுயதொழிலில் ஈடுபடவும், தொழில்முனைவோராக மாறவும் மாற்றுத்திறனாளிகள் ஆகிய எங்களால் எல்லாவற்றிலும் சாதிக்க முடியும் என்பதை நம்பிக்கை ஊட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

காளையார்கோவில் வட்டத்தை சார்ந்த திரு. இளையராஜா சின்னப்பன் அவர்கள் தெரிவிக்கையில்,

நான் காளையார்கோவில் அருகில் உள்ள கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கால் இயக்கக் குறைபாடு பக்கவாதத்தால் 75% பாதிப்படைந்த நிலையில் தசை இறுக்கம், நடப்பதில் திறன் குறைவு, கை–கால் மூட்டுகளை இயக்குவதில் சிரமமாக இருந்த எனக்கு விழுதுகள் மறுவாழ்வு மையத்தில் மூலம் நான் கடந்த ஏழு மாதங்களாக தொடர்ந்து இயன்முறை சிகிச்சை பெற்று வந்தேன். இதன் மூலம் தற்போது கைகால் செயல்பாடுகளில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளேன். மேலும், அன்றாட வாழ்வியல் எனது செயல்பாடுகளிலும், தசைகளிலும் இறுக்கம் குறைந்துள்ளது. நடைதிறனில் நல்ல முன்னேற்றமாக இருப்பதால் நான், எனக்கான மற்றும் எனது குடும்பத்திற்கு என்னால் முடிந்த தொழில் செய்து வருமானத்தை ஈட்டிக் கொள்கிறேன். முடங்கிய என் வாழ்வில் மீண்டும் ஒளியேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகள் சார்பில் நெஞ்சார்ந்து நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு
சு.ஜெகவீரபாண்டியன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,



■ சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, தலைமையில், பள்ளி பாதுகாப்பு மற்றும் மாணவ மாணவியர்கள் நலன் தொடர்பாக அரசு மற்றும் தனியார் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் பள்ளி பாதுகாப்பு விதிமுறைகளை முறையாக கடைபிடித்தல், Anti-Drug Committee-யின் செயல்பாடுகளை தீவிரப்படுத்துதல், பள்ளி வளாகங்களில் திடீர் சோதனைகளை மேற்கொள்ளுதல், மாணவர்கள் மொபைல் போன் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துதல், பாலியல் தொல்லை தொடர்பான புகார்களுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அவசர காலங்களில் காவல்துறையை விரைவாக தொடர்புகொள்வதற்கான காவல் கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்கள் குறித்து தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.இக்கூட்டத்தில் 300–க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



## அமைச்சர் மரிய வில்சனின் மனுவை தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்!

சென்னை, ஆக.29–

சகோதரரை தாக்கிய வழக்கை ரத்து செய்யக் கோரிய அமைச்சர் மரிய வில்சனின் மனுவை, அவர் திரும்பப் பெற்றதைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராவதில் விலக்கு கோரிய மரிய வில்சனுக்கு, "இங்கிலாந்து மன்னர் அல்ல" என உயர் நீதிமன்றம் ஏற்கெனவே கண்டனம் தெரிவித்திருந்தது. ஆகஸ்ட் 31–க்குப் பிறகு புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜராவதாக அவரது தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கடந்த (27.08.2026) தியாகி இம்மானுவேல் சேகரன் 69–வது நினைவு நாள் (11.09.2026) அன்று கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, உட்பட பலர் உள்ளனர்.



## மதுரைக்கு மருத்துவத் துறையில் புதிய மைல்கல்! ரூ.84 கோடியில் மண்டல புற்றுநோய் சிகிச்சை மையம் 100 படுக்கைகளுடன் தீவிர சிகிச்சைப் பிரிவும் அமைக்கப்படுகிறது

மதுரை, ஆக.29–

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் ரூ.84 கோடி மதிப்பீட்டில் புதிய மண்டல புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்கப்பட உள்ளது. மேலும், ரூ.43.18 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கைகள் கொண்ட புதிய தீவிர சிகிச்சைப் பிரிவும் அமைக்கப்பட உள்ளது. இந்த அறிவிப்பு மதுரை மற்றும் தென் மாவட்ட மக்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் அதிகரித்து வரும் புற்றுநோய் பாதிப்புகளைத் தடுக்கவும், நோயாளிகளுக்கு தரமான மற்றும் நவீன சிகிச்சை வழங்கவும் "முதலமைச்சரின் புற்றுநோய் பராமரிப்பு இயக்கம்" செயல்படுத்த ப்படுகிறது. இத்திட்டம் ரூ.673 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட உள்ளது.

இதன் ஒரு பகுதியாக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.471 கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் G+14 தளங்களுடன் ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட உள்ளது. அதேபோல், தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 5 மண்டல புற்றுநோய் சிகிச்சை மையங்கள் நிறுவப்பட உள்ளன.

மதுரையில் ரூ.84 கோடியில் புற்றுநோய் மையம்

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் முதற்கட்டமாக ரூ.84 கோடி மதிப்பீட்டில் G+8 தளங்களுடன் மண்டல புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்கப்பட உள்ளது. இந்த மையத்தில் புற்றுநோயாளிகளுக்கு



நவீன மற்றும் உயர்தர சிகிச்சை வசதிகள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

மேலும், ரோபோடிக் அறுவை சிகிச்சை, Linear Accelerator (LINAC) கதிர்வீச்சு சிகிச்சை, இலக்கு சிகிச்சை மற்றும் நோய் எதிர்ப்பு சிகிச்சை உள்ளிட்ட நவீன மருத்துவ வசதிகளுக்காக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ.106 கோடியே 17 லட்சம் வழங்கப்பட உள்ளது. மருத்துவர்களுக்கான பயிற்சி மற்றும் நோயாளிகளுக்கான ஊட்டச்சத்து ஆதரவுக்காக ரூ.2 கோடியே 77 லட்சம் ஒதுக்கப்பட உள்ளது.

100 படுக்கைகளுடன் தீவிர சிகிச்சைப் பிரிவு

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் ரூ.43.18 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கைகள் கொண்ட புதிய தீவிர சிகிச்சைப் பிரிவும் அமைக்கப்பட உள்ளது. புற்றுநோய் மற்றும் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு ஒரே இடத்தில் உயர்தர சிகிச்சை கிடைக்க இந்தத் திட்டங்கள் பெரிதும் உதவும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தென் மாவட்ட மக்களுக்கு பெரும் பயன்

மதுரையில் இந்த புதிய புற்றுநோய் சிகிச்சை மையம் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படுவதன் மூலம் மதுரை மட்டுமின்றி தென் மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்களும் பயனடைவார்கள். புற்றுநோய் மற்றும் தீவிர சிகிச்சைக்காக நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலை பெருமளவில் குறையும்.

மதுரை மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டங்கள், மதுரையின் மருத்துவத் துறையின் வளர்ச்சியில் முக்கியமான மைல்கல்லாக அமையும் என அரசு ராஜாஜி மருத்துவமனை முதல்வர் அருள்சுந்தரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய புற்றுநோய் சிகிச்சை மையம் மற்றும் 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு அறிவிக்கப்பட்டிருப்பது மருத்துவ மாணவர்கள், மருத்துவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மதுரை மற்றும் தென் மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு நவீன மருத்துவ சிகிச்சை அருகிலேயே கிடைக்க இந்தத் திட்டங்கள் வழிவகுக்கும் என தெரிவித்துள்ளனர்.

## "என் கழிவு என் பொறுப்பு" திடக்கழிவு மேலாண்மை விதிகள் விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம்

மதுரை, ஆக.29–

மதுரை மாநகராட்சி மண்டலம்1 மற்றும் மண்டலம்2 பகுதிகளில் உள்ள மொத்தக் கழிவு உருவாக்குநர்களுக்கு (BWGs) திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கழிவுகளை மூலத்திலேயே பிரித்தல், ஈரக்கழிவுஉலர்கழிவுகளை தனித்தனியாக கையாளுதல், உணவுக் கழிவுகளை முறையாகச் செயலாக்குதல் உள்ளிட்ட நடைமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு. அரவிந்த் ஜோதி , சுகாதார அலுவலர் ராஜ் கண்ணன் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கலந்து கொண்டு, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் கழிவு மேலாண்மை நடைமுறைகள் குறித்து விளக்கி கூறினார்கள்.

மேலும், "என் கழிவு என் பொறுப்பு" என்ற அடிப்படையில் விதிகளை முழுமையாகப் பின்பற்றி தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைக்க அறிவுறுத்தப்பட்டது.

## குடும்ப.அட்டை பயனாளிகளுக்கு eKYC பதிவு மேற்கொள்ள சிறப்பு முகாம் இன்று நடைபெற உள்ளது

திருப்பூர், ஆக.29–

திருப்பூர்.மாவட்டத்தில் பொது விநியோக த்திட்டத்தின் கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் eKYC பதிவுகள் மேற்கொள்ள 02.08.2026, 08.08.2026 மற்றும் 09.08.2026 தேதிகளில் அனைத்து நியாய விலைக்கடைகளிலும் விற்பனை முனைய இயந்திரம் மூலமாக விரல் ரேகை மற்றும் கண் கருவிழி சரிபார்ப்பில் மூலம் eKYC மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு சிறப்பு முகாம் நடைபெற்றது

ஏற்கனவே நடைபெற்ற முகாமில் தங்களது eKYC பதிவுகளை மேற்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள் விரல் ரேகை மற்றும் கண் கருவிழி சரிபார்ப்பில் மூலம் eKYC பதிவுகள் மேற்கொள்ள இன்று 29.08.2026 தேதியில் அனைத்து நியாய விலைக்கடைகளிலும் சிறப்பு முகாம் நடைபெறும். மேற்காண் முகாமில் பொதுமக்கள் தங்கள் குடும்ப அட்டைகளில் உள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களின் eKYC பதிவுகள் மேற்கொள்ள இவ்வாய்ப்பினை தவறாது பயன்படுத்தி கொள்ளுமாறு. மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.





# பி.புத்தூரில் மந்தையம்மன் கோவில் முளைப்பாரி திருவிழா

ராமநாதபுரம், ஆக.29-
ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பி.புத்தூர் கிராமத்தில் உள்ள மந்தையம்மன் கோவிலில் முளைப்பாரி திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

செவ்வாய்க்கிழமை கட்டுதலுடன் தொடங்கிய விழாவையொட்டி, முளைப்பாரி வளர்க்கப்பட்டு, ஒரு வாரமாக பெண்கள் கும்மிப் பாடல்கள் பாடியும், ஆண்கள் ஒயிலாட்டம் ஆடியும்



அம்மனை வழிபட்டனர். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விளக்குப் பூஜையில் நூற்றுக்கணக்கான பெண்கள் பங்கேற்றனர்.

அடுத்த செவ்வாய்க்கிழமை பெண்கள் முளைப்பாரியைத் தலையில் சுமந்து ஊர்வலமாகக் கோவிலுக்கு வந்தனர். பின்னர் முளைப்பாரியை வைத்து, அதைச் சுற்றி கும்மியடித்து வழிபட்டனர். விழாவின் நிறைவாக முளைப்பாரிகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கண்மாயில் கரைக்கப்பட்டன.

# 18 வயதிற்கு உட்பட்ட விடுதிகள் அனைத்தும் கட்டாயம் பதிவு செய்தல் வேண்டும் : திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணரே தகவல்

திருப்பூர், ஆக.29-
திருப்பூர் மாவட்டத்தில் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தங்கி கல்வி பயிலும் தனியார் பள்ளிகளின் கீழ் செயல்படும் விடுதிகளை "தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகள் ஒழுங்கு முறைச்சட்டம்" 2014-ன் படி, உரிமம் பெறுவதற்கு அறை எண்:705, 7-வது தளம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருப்பூர். தொலைபேசி எண்:0421-2971198



தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தங்கியுள்ள அனைத்து விடுதிகளை பதிவு செய்து உரிமம் பெறுமாறும்,

மேலும் பதிவு செய்யாத விடுதிகளின் உரிமையாளர் மீது சட்டப்பிரிவு 20 மற்றும் உட்பிரிவு 2-ன்படி, கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் அத்துடன் ரூ.50000/- (ரூபாய் ஐம்பதாயிரம்) வரையிலான அபராதமும் விதிக்கப்படும் எனவே, 18.வயதிற்குட்பட்ட குழந்தைகள் தங்கியுள்ள அனைத்து விடுதிகளை Tamilnadu Hostels and Homes for Women and Children (Regulation) 2014-ன் கீழ் பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ்நாரணரே தெரிவித்தார்.



### திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பாச்சேத்தி கிராமத்தில்

# செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி

சிவகங்கை, ஆக.29-
சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பாச்சேத்தி கிராமத்தில் கடந்த (24.08.2026) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.



# ஸ்டடி வேர்ல்ட் கல்லூரியில் 'ஆரம்ப் 2026' மாணவர் அறிமுக விழா!

கோவை, ஆக.29-
கோவை பாலதுறையில் உள்ள ஸ்டடி வேர்ல்ட் காலேஜ் ஆஃப் இன்ஜினியரிங் கல்லூரியில், 202627-ம் கல்வியாண்டில் புதிதாக சேர்ந்த மாணவர்களை வரவேற்கும் வகையில் 'ஆரம்ப் 2026' மாணவர் அறிமுக விழா நடைபெற்றது.

அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, கல்லூரித் தலைவர் டாக்டர் வித்யா வினோத், நிர்வாக அதிகாரி எம்.எம். மனோகரன், சொப்னா மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை செயல்பாட்டு அலுவலர் தலைமை தாங்கி தலைமை உரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் டாக்டர் கே. மயில்சாமி வரவேற்புரையாற்றினார். கௌரவ விருந்தினராக மதுக்கரை காவல் நிலைய ஆய்வாளர் டி. ராஜேந்திரபிரசாத் கலந்து கொண்டு மாணவர்களிடம் உரையாற்றினார். மாணவர்கள் ஒழுக்கம், பொறுப்பு மற்றும் சமூக அக்கறையுடன் செயல்பட வேண்டும் என வலியுறுத்திய அவர், போதைப் பொருட்களைத் தவிர்ப்பது, போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு மற்றும் ராகிங் தடுப்பு குறித்து எடுத்துரைத்தார். மேலும், ராகிங் இல்லாத கல்விச் சூழலை உருவாக்குவதில் மாணவர்களின் பங்கு மற்றும் பொறுப்பு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதன்மை விருந்தினராக தன்னம்பிக்கை பேச்சாளர், வாழ்வியல் ஆலோசகர், பாடலாசிரியர், கவிஞர் மற்றும் எழுத்தாளர் தமிழ் இளவல் மதுரை வெ. இராமகிருஷ்ணன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் உரையாற்றினார்.

தன்னம்பிக்கை, நேர்மறை சிந்தனை, தலைமைத்துவப் பண்பு, தகவல் தொடர்புத் திறன் மற்றும் வாழ்க்கைத் திறன்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார். கல்லூரிப் பருவத்தை சிறப்பாகப் பயன்படுத்தி, தங்களது தனித்திறன்களை அடையாளம் கண்டு, எதிர்கால இலக்குகளை நோக்கி நம்பிக்கையுடன் பயணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில் கல்லூரியில் வழங்கப்படும் கல்வி வாய்ப்புகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலைவாய்ப்பு பயிற்சிகள் மற்றும் மாணவர் நலச் செயல்பாடுகள் குறித்து அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பயணமும் ஒரு சிறிய அடியில்தான் தொடங்குகிறது' என்ற கருத்தை மையமாகக் கொண்டு நடைபெற்ற 'ஆரம்ப் 2026' நிகழ்ச்சி, புதிய மாணவர்களின் கல்லூரி வாழ்க்கைக்கு உற்சாகமான தொடக்கமாக அமைந்தது.

# கீழக்கொம்புக்காரனேந்தல் அரசு பள்ளியில் மின் வயர்கள் திருட்டு

## மின்சாரம் இன்றி மாணவர்கள் அவதி

மானாமதுரை, ஆக.29-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழக்கொம்புக்காரனேந்தல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், பள்ளியில் பொருத்தப்பட்டிருந்த மின் வயர்கள் மர்ம நபர்களால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டதாக புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து பள்ளியில் இருந்து மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். மேலும், மின் வசதியை ஏற்படுத்தித் தரக்கோரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் தகவல் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

மின் இணைப்பு இல்லாததால் பள்ளியில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, திருடப்பட்ட மின் வயர்களை மீண்டும் பொருத்தி உடனடியாக மின் வசதியை ஏற்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# NOTICE

This is to inform the public that our client Sri. J. RAMKUMAR Son of (Late) Jayaraman residing at Door No. 9/57, Naidu Line, Ketti, in the district of Nilgiris has misplaced/lost the Original Sale Deed dated 5th December 1958 vide registered as Doc.1341 of 1958 registered before the Sub-Registrar of Assurances, Coonoor which was executed by Sri. Gillan and Sri. Mathan both sons of late Bella Gowder in favor of late V.N. Raju Naidu son of late Narayana samy Naidu residing at, Ketti Village, Coonoor Taluk, In the District of Nilgiris which was lost on 5th August 2026 at about 11.30 a.m. near Ketti Bus stand within Coonoor Taluk Limits when he was on his way to Coonoor. Anyone in possession or have traced/found the above said document shall inform to the undersigned within 10 days from today and it is also stated that if any person in possession misuses of the same with the said document the same will not bind our client in any manner.

Coonoor
29.08.2026

M/s . A. BALU B.Com. B.L,
A.ABDUL RAHIM B.COM. LLB.,
ADVOCATES,
No. 27, MOUNT ROAD,
COONOOR
(baalu7549@gmail.com)
Mob No:- 9443077549/ 8778644934

# ஆர்.வி.எஸ்.கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கோலாகலமாக நடைபெற்ற ஓணம் கொண்டாட்டம்!

கோவை, ஆக.29-
கோவை சூலூரில் உள்ள ஆர்.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கேரள மக்களின் பாரம்பரிய திருவிழாவான ஓணம் பண்டிகையை முன்னிட்டு, கோலாகலமான கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆர்.வி.எஸ். நிர்வாகத்தின் சார்பில் நடைபெற்ற இந்த ஓணம் கொண்டாட்டத்தில், கல்லூரி மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் என ஏராளமானோர் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

ஓணம் பண்டிகையின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார சிறப்புகளை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களிடையே ஒற்றுமை மற்றும் சகோதரத்துவ உணர்வை வளர்க்கும் வகையிலும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன் ஒரு பகுதியாக, கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் ஒன்றிணைந்து அழகிய அத்தப்பூ கோலம் அமைத்தனர்.

வண்ணமயமான மலர்களால் அமைக்கப்பட்ட அத்தப்பூ கோலம், ஓணம் கொண்டாட்டத்தின் பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் வகையில் அமைந்திருந்தது.

தொடர்ந்து, மாணவ, மாணவிகளின் பாரம்பரிய நடனங்கள் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பாரம்பரிய உடைகளில் மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.




மாணவர்களின் நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகள், அங்கு கூடியிருந்த அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தன.

ஓணம் கொண்டாட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், மெகா செண்டமேளம் மற்றும் காவடியாட்டம் நடைபெற்றது.

செண்டமேளத்தின் அதிரடி இசையும், காவடியாட்டத்தின் பாரம்பரிய கலை நிகழ்ச்சியும் கல்லூரி வளாகத்தில் உற்சாகத்தையும் விழாக்கோலத்தையும் ஏற்படுத்தின.

மாணவர்கள் மற்றும் கல்லூரி பணியாளர்கள் ஆர்வத்துடன் பங்கேற்ற இந்த நிகழ்ச்சிகள், ஓணம் கொண்டாட்டத்தின் பாரம்பரிய சிறப்பை மேலும் அதிகரித்தன.

ஓணம் கொண்டாட்டத்தின் மற்றொரு முக்கிய சிறப்பம்சமாக, 25 வகையான உணவுப் பதார்த்தங்களுடன் சிறப்பு ஓணம் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வாழை இலையில் பரிமாறப்பட்ட பாரம்பரிய உணவு வகைகளை மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி பணியாளர்கள் ஒன்றிணைந்து ருசித்து மகிழ்ந்தனர்.

ஓணம் பண்டிகையின் பாரம்பரிய உணவு கலாச்சாரத்தை மாணவர்கள் நேரடியாக அறிந்து கொள்ளும் வகையில் இந்த விருந்து அமைந்திருந்தது.

பல்வேறு மாநிலங்கள் மற்றும் கலாச்சாரங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றிணைந்து ஓணம் பண்டிகையை கொண்டாடியது நிகழ்ச்சியின் மற்றொரு சிறப்பாக அமைந்தது.

இதன் மூலம், மொழி, மாநிலம் மற்றும் கலாச்சாரம் என வேறுபாடுகள் இருந்தாலும், அனைவரும் ஒன்றிணைந்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள முடியும் என்பதை மாணவர்கள் வெளிப்படுத்தினர்.

அத்தப்பூ கோலம், பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், மெகா செண்ட மேளம், காவடியாட்டம், மாணவர்களின் உற்சாகமான பங்கேற்பு மற்றும் 25 வகையான உணவு விருந்து என, ஆர்.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகமே ஓணம் பண்டிகையால் விழாக்கோலம் பூண்டது.

இதனைத் தொடர்ந்து, கல்லூரி வளாகத்தில் செய்தியாளர் சந்திப்பும் நடைபெற்றது.

இதில், ஆர்.வி.எஸ். குழும நிறுவனங்களின் ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு இயக்குனர் சமன்யூ சதீஷ், ஆர்.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி கணினி அறிவியல் துறை உதவி பேராசிரியர் டாக்டர் ரவீந்திரநாத், மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

செய்தியாளர் சந்திப்பில், ஓணம் கொண்டாட்டத்தின் சிறப்புகள் மற்றும் அதன் நோக்கம் குறித்து அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

மாணவர்களிடையே பல்வேறு கலாச்சாரங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தையும், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவ உணர்வையும் ஏற்படுத்தும் வகையில், கல்லூரியில் இதுபோன்ற பாரம்பரிய விழாக்கள் தொடர்ந்து கொண்டாடப்படுவதாக தெரிவித்தனர்.

மாணவர்களின் கல்வியுடன், நாட்டின் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பாரம்பரியங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்தும் வகையில் இந்த ஓணம் கொண்டாட்டம் அமைந்திருந்தது.

மொத்தத்தில், பாரம்பரிய உடைகள்... அத்தப்பூ கோலம்... கலை நிகழ்ச்சிகள்... மெகா செண்டமேளம்... காவடியாட்டம்... 25 வகையான உணவு விருந்து... என, ஆர்.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஓணம் கொண்டாட்டம், மாணவர்களின் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் சிறப்பாக நிறைவடைந்தது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161